ஊழியக்களமான ஒரு பள்ளி



அகதா

நவம்பர் 21, வாரம் 8

போலந்து

1



- வார்சாவுக்கு அருகிலுள்ள அரசுப் பள்ளிகளில் ஏறக்குறைய 20 ஆண்டுகளாக போலந்து மொழியையும் இலக்கியத்தையும் கற்பிக்கி ஆசிரியையாக அகதா பணியாற்றி வந்தார். அவருக்கு ஆசிரியப்பணி பிடிக்கும், ஆனால் காலம் செல்லச்செல்ல ஏதோ ஒன்று குறைவுபடுவதாக உணர்ந்தார். வகுப்பில் மாணவர்கள் அதிகம் இருந்தார்கள், அவசர அவசரமாக பாடங்களை நடத்த வேண்டியிருந்தது, அதனால் மாணவர்களைப்பற்றித் தெரிந்து கொள்ள மிகக்குறைந்த நேரமே இருந்தது.
- “ஏதோ பாடம் நடத்தினோம், சென்றோம் என்று இராமல், என் மாணவர்களைப்பற்றி அறிந்துகொள்ள ஆசைப்பட்டேன். அவர்களுடைய தேவைகள், திறமைகள், அவர்களின் குடும்பங்கள் என அனைத்தையும்பற்றி உண்மையிலேயே தெரிந்துகொள்ள விரும்பினேன்” என்று அகாதா சொன்னார்.
- அந்த விஷயத்தில் கண்டிப்பாக ஒரு மாற்றத்தைச் செய்தாக வேண்டுமென 2018 ஆம் ஆண்டில், தீர்மானம் எடுத்தார். அதே ஆண்டில், அட்வென்டிஸ்ட் பெற்றோர் சிலர் ஒன்றுகூடி, ஒரு ஆலய வளாகத்தில் மழலையர் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கு ஆங்கில வகுப்புகளை நடத்தத் தொடங்கினார்கள். அந்த ஒரு சில குடும்பத்தினரால் தொடங்கப்பட்ட அந்த வகுப்பை தொடர்ந்து நடத்துவதற்கான அவசியம் ஏற்பட்டது.



- அதின் நிமித்தமாக, அந்த வகுப்புகளில் கலந்துகொண்ட மாணவர்களின் பெற்றோர், விசுவாசம், உறவுகள், நோக்கம் ஆகியவற்றிற்கு உதவுகிற ஒரு அட்வென்ட்டிஸ்ட் பள்ளியில் தங்கள் பிள்ளைகள் படிப்பதற்கு ஆசைப்பட ஆரம்பித்தார்கள்.
- தங்களுக்கு உதவுமாறு அந்தப் பெற்றோர் அகதாவிடம் கேட்டுக்கொண்டனர். அகாதாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரே ஒரு வகுப்பறை மட்டுமே இருந்தது, மேலும் அதற்கான நிதியும் மூன்று மாதங்களுக்கு தாக்குப்பிடிக்கிற அளவுக்குத்தான் இருந்தது. அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டால், நிரந்தர ஆசிரியை பணிக்கான சம்பளம் கிடைக்காது; அதே நேரத்தில் வீட்டுக்கடனையும் அடைக்கவேண்டும், பெரும்பாலும் தனது கணவரின் வருமானத்தையே நம்பியிருக்கவேண்டும்.
- “நான் நிறைய ஜெபித்தேன், அது என் வாழ்க்கையின் மிகக்கடினமான முடிவுகளில் ஒன்றாக இருந்தது” என்று அகாதா சொன்னார். அவர் தன்னுடைய கணவரிடம் ஆலோசனை கேட்டபோது, “முயற்சி செய்துதான் பாரேன்” என்று சொல்லிவிட்டார். மூன்று மாதங்கள் கடந்தன; அதன் பிறகு கூடுதல் நிதி கிடைத்தது. “எங்களிடம் பணம் இல்லாத ஒரு தருணமே இருந்ததில்லை, ஆரம்பம் மிகவும் கடினமாக இருந்தபோதிலும், தேவன் அதை ஆரம்பத்திலிருந்தே ஆசீர்வதித்தார்” என்று கூறினார்.



- அவ்வாறு நிச்சயமற்ற ஒரு சூழலில் ஆரம்பிக்கப்பட்டதுதான் ‘காம்பஸ்’ பள்ளி. அது 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கப்படுகிற ஒரு அட்வென்டிஸ்ட் ஆரம்பப் பள்ளியும், மழலையர் பள்ளியும் ஆகும். சில வருடங்களிலேயே, மாணவர் சேர்க்கை ஆரம்பப் பள்ளியில் 50 ஆகவும், மழலையர் பள்ளியில் 32 ஆகவும் உயர்ந்தது. ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் ஆதரவால் இது சாத்தியமானது.
- இந்த வெற்றிக்கு தன்னுடைய குழுவினரே காரணமென அகாதா கூறுகிறார். “இது வெறும் வேலை மட்டுமல்ல, நாங்கள் இதை ஒரு ஆவிக்குரிய பணித்தளமாகவும் பார்க்கிறோம்” என்று சொன்னார். அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு, குறிப்பிட்ட நோக்கமும் ஆவிக்குரிய அரவணைப்பும் காண்ப்படுகிற ஒரு பள்ளி கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளனர்.
- பள்ளி வளர்ந்தபோது, அதனுடைய கல்வி நிதியும் வளர்ந்தது. அட்வென்டிஸ்ட் கல்வி என்பது வழக்கமான பாடத்திட்டத்துடன் வேதாகம வகுப்பையும் சேர்ப்பது மட்டுமல்ல என்பதை அகதாவும் அவரது சக ஊழியர்களும் உணர்ந்தனர். அது ஒரு பிள்ளையின் உடல், உணர்ச்சி, அறிவு மற்றும் ஆவிக்குரிய அம்சங்கள் அனைத்தின் வளர்ச்சியையும் உள்ளடக்கியது.



- வேத வகுப்புகளை வகுப்பறைக்குள்ளே தொடங்கி, பிறகு இயற்கையான சூழலில் தொடருகின்றனர். அங்கே பிள்ளைகள் தங்களைச் சுற்றி காணப்படுகிற மேகங்கள், மரங்கள், மண் மற்றும் வானம் ஆகியவற்றோடு வேதாகம வசனங்களை ஒப்பிட்டுப் புரிந்துகொள்கிறார்கள்.
- “இயற்கையில் அமர்ந்து கற்றுக் கொள்ளும்போது, தேவனுடைய படைப்பின் மத்தியில் சிறுவர்கள் இருக்கிறார்கள், தூய்மையான காற்றைச் சுவாசிக்கிறார்கள், ஓடி ஆடி விளையாடுகிறார்கள், அதனால் அவர்களின் மனம் நன்றாகச் செயல்படுகிறது. மேலும், இயற்கை என்பது தேவன் உருவாக்கிய ஒன்று என்பதையும் அவர்கள் புரிந்துகொள்கிறார்கள்” என்று அகதா கூறினார்.
- மொண்டெஸோரி கல்வி முறைகள், ஒவ்வொரு குழந்தையின் திறமைக்கு ஏற்ப ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்க உதவுகின்றன. சிறுவயது மாணவர்கள் தங்களுக்குத் தேவையான உபகரணங்களின் உதவியால், தங்களால் முடிந்த வேகத்தில், தேவையான வழிகாட்டுதலுடன் கற்றுக்கொள்கிறார்கள்.
- மாணவர்கள் தங்கள் பகுதியிலுள்ள முதியவர்களைச் சந்திப்பது, வேத வசனங்கள் அடங்கிய கையால் செய்யப்பட்ட வாழ்த்து அட்டைகளைப் பகிர்வது மற்றும் தனிமையில் இருப்பவர்களுக்காகப் பாடுவது போன்ற சமூகச் சேவைகளிலும் ஈடுபடுகிறார்கள்.



- வெள்ளிக்கிழமை தோட்ட வேலைகளிலும், பள்ளி வளாகத்தைச் சுற்றிச் வண்ணமடிப்பது, பெருக்குவது, இலைகளைக் கூட்டுவது, விறகு சேகரிப்பது போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். மண்ணில் விதைக்கப்படும் விதைகள் தேவ வார்த்தையைப்பற்றிய பாடங்களாக மாறுகின்றன. வாரத்தின் இறுதி நாட்களில், பெரும்பாலும் தீ மூட்டி சுற்றிலும் அமர்ந்து, மழலையர் பள்ளி பிள்ளைகளும் பெரிய மாணவர்களும் ஒன்றாகக் கூடி, பேசி, விளையாடுகிறார்கள்.
- இங்குள்ள சூழல் குழந்தைகளின் இதயங்களை மாற்றுகிறது, அவர்கள் ஒருவருக்கொருவர் நாகரிகமாகப் பேசுகிறார்கள், தங்கள் வார்த்தைகள் யாரையாவது புண்படுத்துமா என்று யோசித்துப் பேசுகிறார்கள். முதல் வகுப்பு பிள்ளைகள்கூட மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வதைக் காண்கிறோம்" என்று சொன்னார்.
- மழை பெய்துகொண்டிருந்த ஒரு நாளில் வெளியில் சென்றிருந்தார்கள். எட்டு வயதுடைய இரண்டு பிள்ளைகள், அதாவது, அவரது மகளும் அவள் வகுப்புத் தோழனும், "கவலைப்படாதீர்கள், நாங்கள் ஜெபிக்கிறோம்" என்று சொன்னார்கள். அவர்கள் ஜெபித்தார்கள். மழையும் நின்றது.